


# மின்மினி



அக்டோபர் 2017 மின்னல் 01, கதிர் 02

## சங்கமம் தமிழ்ப்பள்ளி

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" ... குறள்: 1

### நிகழ்வுகள்

**அக்டோபர் 21st 2017**
ஓவியப் போட்டி (நேரம் மற்றும் இடம் மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும்)

### சிறப்புச் செய்திகள்

நமது பள்ளியில் பயின்ற **செல்வி. காவ்யா சண்முகம்** லௌடௌன் கவுண்டி நடத்திய **CTT** தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதை மகிச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது **சங்கமம் தமிழ்ப்பள்ளி நூலகம்** செப்டம்பர் (9/30/2017) முதல் செயல்படத் தொடங்கிவிட்டது. புத்தகம் எடுத்து பயன்பெறவும். http://sangamamtamilschool.org/library/

**செயல்படும் இடம்:** Mercer Middle School, Virginia, USA












"மின்மினி" செய்திமடல் வெளியீடு மற்றும் "பெற்றோர் நோக்குநிலை"

செப்டம்பர் மாதம் நடைபெற்ற **பெற்றோர் நோக்குநிலையில்** கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி!!! நமது பள்ளியின் செய்திமடல் **"மின்மினி"** வெளியிட்டதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். **திருமதி.மஞ்சு அய்யம்பாளையம்** அவர்கள் செய்திமடலை வெளியிட **திரு. எஸ். ஆர். சிதம்பரம்** ஐயா அவர்கள் முதல் பதிப்பை பெற்றுக்கொண்டார். நம் குழந்தைகள் செய்திமடலை வாசித்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.






எங்கள் வீட்டு கொலு
சக்தி செந்தில் நாத்

கொலு என்றால் அழகு. ஒவ்வொரு நவராத்திரியும் எங்கள் வீட்டில் கொலு வைத்து கடவுளுக்கு பூஜை செய்வோம். இந்த வருடம் ஏழு படிகளுடன் கொலு வைத்தோம். என் அம்மா பல பொம்மைகளை செய்வார்கள், கடையிலும் சில பொம்மைகள் வாங்கினோம். என் அம்மா செய்யும் பொம்மைகள் எனக்கு மிகவும் பிடிக்கும். இந்த வருட கொலுவில் இரண்டு மண்டபங்கள் வைத்தோம். ஒன்று அம்மன், மற்றொன்று கோயில். தினமும் மாலையில் பத்து நாட்களும் நண்பர்கள் வருவதும், சாமி பாடல்களைப் பாடுவதும் எனக்கு மிகவும் பிடிக்கும்.

## வாழை இலையும் தமிழர்களும் !!!!

**சுட்டிகளே!! பசிக்குதுங்க. உணவு பரிமாற தயாருங்களா?? இலையில் எந்த இடத்தில எந்த உணவு பரிமாறுவார்கள்? வலது பக்கம் இருக்கும் உணவுகளை இலையில் உள்ள எண்களுடன் பொருத்தங்கள் பார்க்கலாம்.**




- பச்சடி, கூட்டு, பொரியல், அவியல், வறுவல் ஊறுகாய் ஆகியவற்றை வலத்திலிருந்து இடது பக்கமாக பரிமாறவேண்டும்
- அன்னம்
- இனிப்பு பலகாரம் பாயாசம்
- உப்பு
- புளி  சாதம் எலுமிச்சை சாதம் போன்றவை
- அப்பளம், வடை போன்ற நொறுக்கு தீனி வகைகள்

**எனக்கு தொன்மையான வரலாறு உண்டு. நான் யார்??**

A. தவில்

B. கடம்


C. ஆகுளி

D. தண்ணுமை (அ) மிருதங்கம்



**உணவில் ஆறு சுவை இருக்காமே... எங்களுக்கும் ஆறு வித்தியாசம் இருக்கு, கண்டுபிடிங்க!!!**







**நாநெகிழ் பயிற்சி**


கொக்கு நெட்ட கொக்கு, நெட்ட கொக்கு இட்ட முட்ட கட்ட முட்ட

லோடு ரோலர்



## நான் யார்???

புள்ளிகளை வரிசைப்படி இணைத்து, நான் யார் என்று கண்டுபிடியுங்கள் !!!







நான் தான் கரிக்கோல். என் விடுகதை சவால் இதோ .... கண்டுபிடிங்க பார்க்கலாம் !!!

"முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை"
அது என்ன ???

"விடிய விடிய வேலை செய்பவனுக்கு ஒரு கை சின்னதாம்"
அவன் யார்???



எண்ணி எண்ணி எழுதிக்கோ!

9 எண்ணி எண்ணிப் பாருங்க...
எத்தனை எத்தனை எழுதுங்க!

## தமிழரின் பாரம்பரிய விளையாட்டு மறைந்துபோன விளையாட்டு

# பம்பரம்









**ஆடுபொருள்:** பம்பரம், ஒரு மீட்டர் நீளமுள்ள சாட்டை(கயிறு).

**அமைப்பு:** மரக்கட்டையின் மேல் பகுதியின் அகன்றும் கீழே வர வரக் குறுகியும் கூம்பு வடிவிலும் இருக்கும்.அதன் கூம்பு அமைப்பில் ஒரு ஆணி இணைக்கப் பட்டிருக்கும். பம்பரக்கட்டையில் வண்ணம் பூசப்பட்டிருக்கும்.

மொபைல் போனிலும் கம்ப்யூட்டரிலும் விளையாடுவதை விட்டுவிட்டு
அப்பா அம்மாவை **பம்பரம்**
வாங்கித்தரச் சொல்லுங்களேன்!!!
பம்பரம் விளையாடிப்பாருங்களேன்!!!!

# சங்கமம் சிற்றுலா



நம் **சங்கமம் குடும்பத்தின்** இன்பச் **'சிற்றுலா'** கடந்த **செப் 24ம்** நாள் **'லேக் ஆன்' பூங்காப் பகுதியில் காலை 11 மணி முதல் மாலை 5 மணிவரை** இனிமையாக நடைபெற்றது. சுமார் **200 பேர்** கலந்துகொண்ட நிகழ்ச்சியில் நம் பள்ளிச் சிறார்கள் மட்டுமல்லாது, பெற்றோர்களுடன் ஊரிலிருந்து வந்த பல தாத்தா பாட்டிகளும் கலந்துகொண்டு பல பொழுதுபோக்கு விளையாட்டுக்களில் ஆர்வமுடன் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்வில், வாயில் தேக்கரண்டியை கவ்விக்கொண்டு அதன்மேல் வைத்துள்ள எலுமிச்சையை விழாமல் ஏந்திக்கொண்டு நடக்கும் போட்டியில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பங்கேற்று நடைபோட்டது அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது.

அடுத்ததாக, கயிறு இழுக்கும் போட்டியில் இரண்டு பிரிவினரும் பெரும் ஆரவாரத்துடன் வலுவாக இழுத்து மகிழ்ந்தனர். அனைவரும் வயிறு குலுங்க 'விழுந்து விழுந்து' சிரித்தார்கள்.

சிறுவர்கள் பங்குகொண்ட அலங்கார மிதிவண்டி ஊர்வலம் பூங்காவை அழகுடன் சுற்றிவர, அனைவரின் கண்களும் இமைக்க மறந்து நம் சிறுவர்களையே சுற்றிவந்தன.

கைப்பந்தாட்டம், கபடி, பெண்கள் கலந்துகொண்ட கோ-கோ விளையாட்டு, ஜோடிகள் கலந்துகொண்ட பலூன் உடைக்கும் போட்டி என்று மாறி மாறி பல விளையாட்டுக்கள் ஆங்காங்கே அரங்கேறிக்கொண்டிருக்க, குட்டீஸ் மட்டும் நைசாக நழுவிக்கொண்டு அங்கிருந்த நீரூற்றில் ஆனந்த 'மழை' ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

அனைவரும் கொண்டுவந்திருந்த கூட்டாஞ்சோறும், கம்பங்கூழும், பல்சுவை உணவுவகைகளும் அருமை அருமை. அந்நிய நிலம்தான் ஆனாலும் சொந்தங்களும், உறவுகளும், பண்பட்ட தமிழ்ப்பண்பாடும் எங்கள் சொத்துக்கள் என்று அன்னைத்தமிழ் ஊட்டும் நம் **சங்கமம் பள்ளிக் குடும்பம்** உரக்க உரைக்கும்படியாக அமைந்து முடிந்தது இந்த நிகழ்வு.

ஓயாது உழைத்து, ஓடியாடி வேலைசெய்து, ஒவ்வொன்றையும் ஒருகுறையிலாது நடத்திக்காட்டிய நம் ஒருங்கிணைப்பாளர்களுக்கும், தன்னலம் கருதா தன்னார்வலர்களுக்கும் பாசமுடன் பங்கேற்ற அனைவருக்கும் தாராளமாய்ப் போடுவோம் **...'ஓ'....** மற்றுமொரு இனிய சங்கம நிகழ்வுக்காக காத்திருப்போம் இனி ......

உங்கள் குழந்தைகளுக்கு கட்டுரை அல்லது கதை எழுதுவதில் ஆர்வம் இருப்பின், அவர்களின் படைப்பை newsletter@sangamamtamilschool.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். குழந்தைகளின் படைப்பை ஆய்வு செய்த பின் அடுத்து வரும் **“மின்மினி”** செய்திமடல் பதிப்புகள் ஒன்றில், அவர்கள் கட்டுரையை மலரச் செய்வோம்.